**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 52/2022**

திரு. சுப்பிரமணி (P.W. –2) **09.02.2026**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்து உள்ளேன் என்றால் படிக்கவில்லை. தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வாதி எனக்கு உறவு என்றால் சரி. தாவா சொத்து பாகப்பிரிவினைப்படி ராஜனுக்கு பாத்தியம் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் தெரியாது. தங்கமணி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்தை தங்கமணிக்கு அவருடைய கணவர் ராஜன் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. எந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் வட்டிக்கு பணம் கொடுப்பதாக அழைத்துச் சென்று சாட்சி கையொப்பம் செய்யச் சொன்னார்கள். அந்த ஆவணத்தை நீங்கள் படித்துப் பார்க்கவில்லை என்றால் சரி எனக்கு படிக்க தெரியாது.

2. வாதியும், முதல் பிரதிவாதியும் தற்சமயம் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரி. முதல் பிரதிவாதி அவருடைய வியாபாரத்திற்காக நிறைய இடத்தில் கடன் பெற்றுள்ளார் என்றால் சரி. கடனுக்காக தாவா சொத்தை வாதி விற்பனை செய்து முதல் பிரதிவாதியின் கடனை அடைத்துள்ளார். வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் சொன்னது போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தை சரியான விலையை பெற்றுக் கொண்டுதான் வாதி விற்பனை செய்துள்ளார், வழிகாட்டுதல் மதிப்பு விட அதிகமாக நாங்கள் கிரயம் பெற்றதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல.

3. எனக்கு தமிழ் படிக்க எழுதத் தெரியாது. என்ன ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரியாமலேயே கையொப்பம் செய்து பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கடனுக்காக தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்து மூன்று ரூபாய் வட்டி பெறுவதாகச் சொன்னார், பார்த்து அதை செய்து கொள்ளும்படி நான் சொன்னேன். அவர்கள் செய்து கொடுத்த ஆவணம் கிரைய ஆவணம் என்றால் கிரைய ஆவணம் செய்து கொடுத்தால் தான் பணம் கொடுப்பதாக சொன்னார்கள். தாவா சொத்தை விற்பனை செய்வதாக சொல்லி வாதி கிரயம் செய்து கொடுத்து விட்டு தற்போது அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3, 4 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/–கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.